1981 ஏப்ரல் 1]

திரு. ந. குலசேகர பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலங்காயத்திலே என்னுடைய தொகுதியிலே இருக்கின்ற வேலை வாய்ப்பு அலுவலகத்தை வேறு இடத்திற்கு மாற்றுகின்ற உத்தேசம் அரசுக்கு இல்லை என்று சொன்னதற்காக நன்றி. மேலும், தற்போது அதை மாற்றுவது என்ற பேச்சு அடிபட்டதன் காரணத்தால் மிகுந்த பரபரப்பு வாணியம்பாடி போன்ற பகுதிகளில் ஏற்பட்டிருக்கின்றது. இந்த அறிவிப்பின் மூலம் அந்த நிலைமை தணியும்.

மேலும், ஒரு சிறிய குறைபாடு இருக்கின்றது. அங்கே இருந்து அரசாங்க மேலதிகாரிகளுடன் தொடர்பு கொள்வதற்கு வசதியாக அந்த அலுவலகத்தில் தனியாக தொலைபேசி வசதி இல்லாமல் இருக்கின்றது. ஆகவே, அதைச் செய்து தர அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தமிழகத்திலே 11 இடங்களில் துணை வேலை வாய்ப்பு அலுவலகங்கள் இருக்கின்றன. அவற்றில் பல இடங்களில் தொலைபேசி வசதி இல்லாதது அரசுக்கு சுட்டிக்காட்டப் பட்டுள்ளது. கூடிய விரைவில் அரசு தகுந்த நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மு. சுந்தரராஜன் : தலைவரவர்களே, வேலைவாய்ப்பு அலுவலகங்களிலே முன்பு எவ்வளவு அலுவலர்கள் அனுமதிக்கப் பட்டார்களோ அவர்கள் தான் இன்னும் பணிபுரிந்து வருகிறார்கள். தற்போது பதிவு செய்தவர்களின் எண்ணிக்கை பல மடங்கு பெருகி இருப்பதன் காரணத்தால் அலுவலர்களை அதிகமாக நியமிப்பதற்கு அரசு முன் வருமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது ஆலங்காயம் வேலை வாய்ப்பு அலுவலகம் பற்றிய கேள்வி. ஆகவே, மற்ற விவரங்களைக் கேட்கக் கூடாது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பாலியஸ்டர் இழை நூல் உற்பத்தி

*குறுகிய கால வினா எண். 10.—திரு. கு. அ. செங்கோட்டையன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் பாலியஸ்ட்டர் இழைநூல் (Poleyster Stapl Fibre) உற்பத்தி செய்ய உரிமம் கேட்டு யாரேனும் விண்ணப்பித்துள்ளனரா ?

(ஆ) ஆம் எனில் அவ்விண்ணப்பத்தின் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

[1981] ஏப்ரல் 1

மாண்புமிகு திரு. எஸ். திருநவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, (அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் ரூபாய் 35 கோடி மூலதனத்தில் சுமார் 500 பேருக்கு வேலை கிட்டும் விதத்தில் ஆண்டு ஒன்றிற்கு 15,000 டன் பாலியஸ்டர் நாரிழையினைத் தயாரிக்கும் தொழிற்சாலையைத் தமிழ்நாட்டின் பின் தங்கிய பகுதியில் அமைக்க முன் உரிமம் வழங்க மே, 1980 இல் மைய அரசைக் கேட்டது. இத்திட்டத்திற்கு விரைவில் உரிமம் வழங்குமாறு மைய அரசை மாநில அரசு பல முறை வற்புறுத்தியது. எனினும், இப்போது இந்தத் திட்டத்திற்கான முன்னுரிமம் வழங்குவதை மைய அரசு நிராகரித்து விட்டது.

[முற்பகல் 10—20]

திரு. கு. அ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லுகிறபோது, மத்திய அரசு அனுமதி மறுத்திருக்கிறது என்று சொன்னார்கள். மீண்டும் தமிழக அரசு மத்திய அரசை வற்புறுத்தி, அதைத் துவங்குவதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். திருநவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே பல தடவை தொடர்ந்து வலியுறுத்தப்பட்டிருக்கிறது. பெட்ரோலிய அமைச்சர் அவர்களுக்கும், மத்திய தொழில் அமைச்சர் அவர்களுக்கும், அதைப் போலவே பாரதப் பிரதமர் அவர்களுக்கும், நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களே கடிதம் எழுதியிருக்கிறார்கள். இருந்தும்கூட மத்திய அரசு இது சம்பந்தமாக மறுத்து வருகிறது. இருந்தாலும் தொடர்ந்து இதைப் பெற மாநில அரசு மத்திய அரசை வலியுறுத்தும்.

திரு. கு. அ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட மாநிலங்களில்தான் இந்தப் பாலியஸ்டர் இழைநூல் உற்பத்தி செய்கிற ஆலைகள் இருக்கின்றன. அங்கேயிருந்துதான் தமிழகத்திற்கு வந்துகொண்டிருக்கிறது. ஆகவே, என்ன காரணத்தினால் அதற்கான அனுமதி மறுக்கப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'The proposal could not be approved as there is no scope for creation of additional capacity for the manufacture of the item in question.'

1981 ஏப்ரல் 1]

என்றுதான் முதல்வர் அவர்களுக்கு, மத்திய தொழில் அமைச்சர் அவர்கள் காரணமாகச் சொல்லி கடிதம் எழுதியிருக்கிறார்களே தவிர, வேறு எந்தக் காரணத்தையும் சொல்லவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர். மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் வளம் பெருக வேண்டும் என்பதினால், பாலியஸ்டர் இழை நூல் உற்பத்தி செய்கிற உரிமம் கேட்டு விண்ணப்பித்திருந்தாலும் சரியான காரணத்தைக் சுட்டிக் காட்டாமல், மத்திய அரசு நிராகரித்து இருப்பது வருத்தத்திற்குரியது என்று எடுத்துக் கொண்டாலும், மீண்டும் மத்திய அரசை வற்புறுத்தி, இந்த உரிமம் கேட்டு விண்ணப்பித்திருப்பவர்களுக்கு மத்திய அரசினுடைய சார்பிலே மாநில அரசே அந்த உரிமம் கொடுப்பதற்கான வகையில் அனுமதி பெறுவதற்கு தொடர்ந்து நடவடிக்கைகளை தமிழக அரசு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசினுடைய நிறுவனமான, தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம்-டிட்கோ தான் அந்த லைசன்ஸ் கேட்டு விண்ணப்பித்துக் கொண்டிருந்தது. மத்திய அரசு மறுத்திருக்கிறது. எனினும் நாம் மத்திய அரசை வற்புறுத்துகிறோம். வற்புறுத்துவோம்.

திரு. என்.எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பாலியஸ்டர் இழை நூல் உற்பத்தி செய்வதற்கான மூலப் பொருள் தமிழகத்தில் போதுமான அளவு கிடைக்கிறதா? தற்போது தமிழகத்தில் அந்த ரகங்களை உற்பத்தி செய்கிற ஆலை ஏதாவது இருக்கிறதா? பெரிய அளவில் இல்லாவிட்டாலும், சிறிய அளவிலாவது அதனை அமைப்பதற்கு அரசு ஏதாவது நடவடிக்கையைத் தொடங்கியிருக்கிறதா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் மட்டும் அல்ல. தென் மாநிலமான நான்கு மாநிலங்களிலும் இல்லை. அதனால்தான் தொடர்ந்து டிட்கோவும் வற்புறுத்திக் கொண்டு வருகிறது. அதனால்தான் முதலமைச்சர் அவர்கள், தொழில் அமைச்சருக்கும் பிரதம அமைச்சர் அவர்களுக்கும் எழுதிக் கேட்டார்கள், ஆனால் அவர்கள் மறுத்து விட்டார்கள். தொடர்ந்து இது குறித்து வற்புறுத்தப்படும் என்று நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். மூலப் பொருள் பற்றிக் கேட்டார்கள். அவைகள் எல்லாம் இங்கே கிடைக்கின்றன. அதனுடைய ஃபீசிபிலிட்டி ரிப்போர்ட்டுகளை எல்லாம் அனுப்பித்தான் இதற்கான அனுமதியைக் கேட்டிருக்கிறோம்.